**சுருக்கம்**

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் – 2010 – ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்குதல் – 01.01.2010 முதல் விநியோகத்தை செயல்படுத்துதல் – மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்ய அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் (இஇ1(2) துறை**

**அரசாணை(நிலை) எண். 454** **நாள்: 30.11.2009**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.684 வருவாய்த் துறை, நாள் 02.12.2008.
2. அரசாணை (நிலை) எண்.44 கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 18.05.09.
3. முதன்மைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண். வநி 7(2)/ 34464/09, நாள் 27.10.09.

✸✸✸

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.44, கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர்துறை, நாள் 18.05.2009–ன்படி 2010–ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் உள்ள மக்களுக்கு இலவசமாக சேலை மற்றும் வேட்டி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த அரசாணையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு வழங்குவதற்காக 159.44 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 158.80 இலட்சம் பாலிகாட் வேட்டிகள் தேவைப்படுவதாக நிர்ணயம் செய்து அரசு உத்திரவிட்டுள்ளது. கடந்த ஆண்டு பொங்கல் திருநாளின் போது பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மேற்படி அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

2. 2010 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் தொடர்பாக முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் தனது அறிக்கையில், பயனாளிகளுக்கு வழங்குவதற்காகத் தேவைப்படும் சேலை / வேட்டிகளின் தேவைப்பட்டியலை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து கோருவதற்கு பதிலாக, மாவட்டங்களில் தற்போது உள்ள நிலுவை விவரம் கோரப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட இருப்பு விவரங்கள், கடந்த 2009 பொங்கல் திருநாளுக்கு பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கையிலிருந்து கழித்து, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் மாவட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒதுக்கீடு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:–

| | | **சேலைகள்** | **வேட்டிகள்** |
|---|---|---|---|
| 1. | அரசு ஆணையில் உத்தரவிடப்பட்ட எண்ணிக்கை | 1,59,44,000 | 1,58,80,000 |
| 2. | மாவட்டங்களுக்கு தற்போது ஒதுக்கீடு செய்யக் கோரும் எண்ணிக்கை | 1,58,24,185 | 1,57,91,133 |
| 3. | கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தினரிடம் மீதம் இருப்பதாக எதிர்ப்பார்க்கப்படும் எண்ணிக்கை | 1,19,815 | 88,867 |

மேற்படி இருப்பு எண்ணிக்கை, கூடுதலாக தேவை கோரி பெறப்படும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம் என்றும் எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு 2010–ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குவதற்கு மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அரசின் ஆணையை கோரியுள்ளார்.

3. மேற்கூறப்பட்ட சூழ்நிலையில், 2010–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகளை வழக்கமான நிபந்தனைகளுடன், 01.01.2010 முதல் விநியோகத்தை துவக்கிடவும், வேட்டி, சேலைகளை மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யவும் முதன்மை செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இலவச வேட்டி, சேலைகள், விநியோகம் செய்யப்படும்போது, நியாய விலைக்கடை முன்பு, பொது மக்கள் கூட்டம் அதிகம் சேராத வகையில் ஒவ்வொரு நாளும், ஒரு நியாய விலைக் கடையில் குறைந்த அளவிலான பயனாளிகளுக்கு மட்டும் விநியோகம் செய்திடும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இலவச வேட்டி சேலைகளை, கிராம நிர்வாக அலுவலர் நியாய விலைக்கடை விற்பனையாளர் மற்றும் ஊரக வளர்ச்சி துறை சார்ந்த ஒரு அலுவலர் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட வேண்டும் எனவும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இலவச வேட்டி, சேலைகளை ஒவ்வொரு மாவட்டத்தின் விநியோக மையங்களுக்கு, உரிய நேரத்தில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறை அ.சா.எண். 3222/FS/P/2009 நாள் 12.11.2009 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, சென்னை–108.
மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ், எழும்பூர், சென்னை–8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு (வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை) அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு (கைத்தறித் துறை) அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு (நிதித்துறை) அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர் துறை/நிதித்துறை, சென்னை–9.
இகோ/உதிரி.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

பிரிவு அலுவலர்